**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத் தேர்வுகள், மார்ச் - 2024**

**தேர்வு முடிவுகள் வெளியிடல்,**

**செய்திக்குறிப்பு**

மார்ச் - 2024-ல் நடைபெற்ற 2023-2024-ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாமாண்டு (11-ஆம் வகுப்பு) பொதுத்தேர்வு முடிவுகள் 14.05.2024 (செவ்வாய்கிழமை) அன்று பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் அமைந்துள்ள அரசுத் தேர்வுகள் இயக்கத்தில் காலை 9.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. மாணவர்கள் தங்கள் தேர்வு முடிவுகளை பின்வரும் இணையதள முகவரியில் அறிந்துக்கொள்ளலாம்.

| வகுப்பு | தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் மற்றும் நேரம் | இணையதள முகவரி |
|---|---|---|
| மேல்நிலை முதலாமாண்டு (11-ஆம் வகுப்பு) | 14.05.2024 (செவ்வாய்கிழமை) காலை 9.30 மணிக்கு | https://results.digilocker.gov.in/ www.tnresults.nic.in www.dge.tn.gov.in |

தேர்வர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளங்களில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை பதிவு செய்து தேர்வு முடிவுகளைஅறிந்து கொள்ளலாம்.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் தேசிய தகவலியல் மையங்களிலும் (National Informatics Centres) அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும் கட்டணமின்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

-2-

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். மேலும், பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணிற்கும், தனித்தேர்வர்களுக்கு ஆன்-லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணிற்கும் குறுஞ்செய்தி (SMS) வழியாக தேர்வு முடிவுகள் அனுப்பப்படும்.

ஒம்/-

இயக்குநர்

இடம்: சென்னை-6

நாள்: 11.05.2024.